செ.வெ.922/2017 நாள்: 06.12.2017.

**ஓகி புயலால் பாதிக்கப்பட்ட மீனவ கிராமங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பாதிக்கப்பட்ட மீனவ கிராமங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., ஆகியோர் இன்று (06.12.2017) ஆய்வு மேற்கொண்டனர்.

நீரோடி, மார்த்தாண்டன்துறை, வள்ளவிளை, இரவிபுத்தன்துறை, சின்னதுறை, தூத்தூர், பூத்துறை மற்றும் இரயுமன்புத்தன்துறை ஆகிய மீனவ கிராமங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலர் ஆகியோர் மீனவ மக்களிடம் காணாமல் போன மீனவர்களின் விவரங்கள் குறித்தும், இந்த ஓகி புயலால் சேதமடைந்த வள்ளம், படகுகள், இதர சேதங்கள் மற்றும் மீனவ மக்களின் குறைகளைக் கேட்டறிந்தனர்.

மேலும், இந்த ஓகி புயலால் உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினர். சேகரிக்கப்பட்ட காணாமல் போன மீனவர்களின் விவரங்கள், சேதங்களின் விவரங்கள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மீனவ மக்களிடம் தெரிவித்தனர்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது:-

இன்று ஓகி புயலால் பாதிக்கப்பட்ட 7 கிராமங்களில் காணாமல் போன மீனவர்களின் விவரம், சேதமடைந்த வள்ளம், படகுகள் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது. அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். காணாமல் போன மீனவர்களை கண்டுபிடிப்பதற்காக மகாராஷ்டிரா, குஜராத், கார்வார், லட்சதீவுகள், ரத்தினகிரி ஆகிய கடலோர காவல்படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் காணாமல் போன மீனவர்களை தேடும் பணியினை செய்து வருகின்றனர். அதேபோல் சில மீனவர்கள் பாதுகாப்பாக கேரளா, குஜராத், கார்வார், லட்சதீவுகள் ஆகிய பகுதிகளில் கரை சேர்ந்துள்ளதாக மீனவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர். அவர்களை பாதுகாப்பாக சொந்த ஊருக்கு திருப்பி அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், சேதமடைந்த வள்ளம், படகுகள் ஆகியவைகளுக்கு உரிய நிவாரணத்தொகை வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். மீனவ மக்கள் நியாயவிலை கடைகளில் கூடுதலாக உணவு பொருட்கள் வழங்க கோரியுள்ளனர். அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என பேசினார்.

இந்த ஆய்வின்போது உதவி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சாய்சரன் தேஜஸ்ரீ,இ.கா.ப., கூடுதல் ஆட்சியர் (பத்மநாபபுரம்) திரு.ராஜகோபால் சுங்ரா,இ.ஆ.ப., துணை இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. ஜெயக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**